# 11

# நல்ல நட்பு

اَلْأَخِلَّاءُ يَوْمَئِذٍ بَعْضُهُمْ لِبَعْضٍ عَدُوٌّ إِلَّا الْمُتَّقِيْنَ

''உற்ற நண்பர்களாக இருந்தோரில் (இறைவனை) அஞ்சி வாழ்ந்தோரைத் தவிர (மற்றவர்கள்) அந்நாளில் ஒருவருக்கொருவர் பகைவர்களாக இருப்பார்கள்'' (43:67)

ஒரு மனிதனின் வாழ்வில் தாக்கம் செலுத்தக்கூடிய மிகப் பிரதான அம்சமாக நட்பு காணப்படுகின்றது. இஸ்லாம் நட்புக்குக் கூடிய முக்கியத்துவம் கொடுத் துள்ளது. அது பற்றி அதிகம் பேசியுள்ளது. இஸ்லாம் காட்டித்தந்தவாறு நட்பு அமையும் போது, அது அல்லாஹ்வின் அன்பையும் அருளையும் பெற்றுத்தரும். அதற்கு மாற்றமாக அமையும் நட்பானது உலகில் பல்வேறு பிரச்சினைகளையும் துன்பங்களையும் தேடித்தரும். மறுமையில் அல்லாஹ்வின் கோபத்தையும் தண்டனையையும் பெற்றுத்தரும்.





இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

★ **இஸ்லாம் விரும்பும் நட்பு பின்வரும் அடிப்படைகளின் மீது அமைய வேண்டும்.**

### நட்பு கொள்ளப்படுபவன் இறை விசுவாசியாக இருத்தல்

''இறை விசுவாசியான ஒருவரையே உங்களது தோழனாக ஆக்கிக் கொள்ளுங்கள்'' (அபூ தாவுத்)

### அல்லாஹ்வுக்காக நேசித்தல்

ஈமானின் இனிமையைச் சுவைக்கும் பாக்கியம் பெற்ற நல்ல முஃமினின் பண்பு களில் ஒன்று: ''அவன் நேசித்தால் அல் லாஹ்வுக்காகவே நேசிப்பான். வெறுத்தால் அல்லாஹ்வுக்காகவே வெறுப்பான்.'' (முஸ்லிம்)



### இறையச்சம் காணப்படுதல்

''உற்ற நண்பர்களாக இருந்தோரில் (இறைவனை) அஞ்சி வாழ்ந்தோரைத் தவிர (மற்றவர்கள்) அந்நாளில் ஒருவருக்கொருவர் பகைவர்களாக இருப்பார்கள்'' (43:67)

### நன்னடத்தை காணப்படுதல்

''தன் நண்பர்களிடத்தில் மிகச்சி றந்தவனே அல்லாஹ்விடத்தில் மிகச் சிறந்தவன் ஆவான்'' (திர்மிதி)

### நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல்

ஸஹாபாக்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது, ''நாம் எமது ஈமானைப் புதுப்பித்துக்கொள்வோம்'' ''அடுத்தவர்கள் கவனயீனமாக இருக்கும் இந்நாளில் நாம் இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருவோம்'' போன்ற வார்த்தைகளைக் கூறி சக நண்பரை நன்மையின்பால் தூண்டக் கூடியவர்களாக இருந்தார்கள்.

**நட்பு நீடித்து நிலைக்க சில வழிமுறைகளை இஸ்லாம் காட்டித் தந்துள்ளது.**

**1. நண்பனை முழுமையாக புரிந்துகொள்ளல்.**

''ஒரு மனிதன் இன்னொரு மனிதனுடன் நட்புக் கொண்டால் அவரது பெயர், தந்தையின் பெயர், வம்சாவழி போன்றவற்றை வினவி அறிந்து கொள்ளட்டும். இது அவர்களுக்கிடையில் நட்பு நிலைக்க வழிசெய்யும்.'' (திர்மிதி)

**2. நட்பை வெளிப்படுத்தல்.**

''உங்களில் ஒருவர் தன் சகோதரன் மீது நட்புக்கொண்டால் தான் அவர் மீது நட்புக்கொள்வதைத் தெரிவிக்கட்டும்.'' (அஹ்மத்)

**3. அன்பளிப்புகளைப் பரிமாறுதல்.**

''அன்பளிப்புகளைப் பரிமாறிக்கொள்ளுங்கள். அது அன்பை அதிகரிக்கும்.'' (புஹாரி)

**4. வாழ்த்துக் கூறல், முஸாபஹா (கைலாகு), முஆனகா (ஆரத் தழுவுதல்) செய்தல்.**

ஒரு முஃமினின் உயர் இலட்சியம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறவேண்டும் என்பதாகும். நல்ல நட்பு இதற்குச் சிறந்த வாய்ப்பாக அமைகிறது.

## சிறந்த நட்பின் பயன்கள்

- மறுமையில் நிழலே இல்லாத மஹ்ஷரில் இந்த நட்பு எமக்கு நிழல் பெற்றுத்தரும்.

''எனது மாட்சிமை மீது அன்பு செலுத்துபவர்கள் எங்கே? வேறு நிழலே இல்லாத அந்நாளில்; நான் அவர்களுக்கு நிழல் கொடுப்பேன்.'' (அஹ்மத்)

- அல்லாஹ்வுக்காக நேசித்தோர் மறுமையில் உயர் அந்தஸ்த்தைப் பெறுவர்

''அல்லாஹ்வின் அடியார்களில் சிலர் இருப்பர். அவர்கள் இறைத் தூதர்களுமல்லர். ஷுஹதாக்களுமல்லர். ஆனால் அல்லாஹ்விடம் அவர்கள்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

பெறுகின்ற உயர் கண்ணியத்தினைக் கண்டு இறைத்தூதர்களும் ஷுஹதாக்களும்கூட பொறாமைப்படுவர். அவர்கள்தான் அல்லாஹ்வுக்காக ஒருவரையெருவர் நேசித்தவர்கள் (அஹ்மத்)

- நட்பு எமது ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தும்

நல்ல நண்பர்களுடனான உறவு எமக்கு நன்மை பயக்கும் அதே வேளை மோசமான நட்பு எமக்கு தீமையையே கொண்டுவரும்.

''நல்ல நண்பனுக்கும் கெட்ட நண்பனுக்கும் உதாரணம் கஸ்தூரி வியாபாரியையும் கொல்லனையும் ஒத்ததாகும். கஸ்தூரி வியாபாரி உன்மீது அதனைத் தடவி விடலாம், அல்லது அதிலிருந்து கொஞ்சம் நீ வாங்கிக் கொள்ளலாம், அல்லது அதன் நறுமணத்தையாவது நீ நுகரலாம். கொல்லனின் சூழையிலிருந்து வரும் தீப்பொறிகள் உனது ஆடையை எரித்து விடலாம். அல்லது அதன் புகை உன் மூக்கை உறுத்தலாம்'' (புஹாரி)

- தீய நட்பு இழிவைத் தரும்

இஸ்லாமிய வழிமுறைக்கு மாற்றமான நட்பு உலகில் பாதிப்புக்களை ஏற்படுத்துவது போலவே மறுமையிலும் இழிவையும் துன்பத்தையுமே பெற்றுத் தரும்.

''எனக்கு வந்த கேடே! (என்னை வழிகெடுத்தவனை) நண்பனாக ஆக்கிக் கொள்ளாது இருந்திருக்க வேண்டாமா? நிச்சயமாக என்னிடம் நல்லுபதேசம் வந்த பின்னரும் அதிலிருந்து அவன் என்னை வழி கெடுத்தானே!'' (25:28-29) என நண்பனால் வழிகெடுக்கப்பட்டவன் கவலையும் கைசேதமும் அடைவான்.

ஒரு முஸ்லிம் தனது மறுமை வாழ்வை இலக்காகக் கொண்டு நல்ல நட்பைக் கட்டியெழுப்ப வேண்டும். ஆசிரியர்கள், ஆலிம்கள், அறிஞர்கள் போன்றோருடன் நல்லுறவைக் கட்டியெழுப்பி அவர்களிடமிருந்து சிறந்த முன்மாதிரிகளைக் கற்றுப் பின்பற்ற வேண்டும். அவ்வாறே அல்குர்ஆன் ஓதுதல், கற்றல், ஸுன்னத்தான தொழுகைகள், நோன்புகள், திக்ர் அவ்ராத்கள் போன்ற ஸாலிஹான அமல்களையும் தனது நட்புக்குரியவையாக ஆக்கிக் கொள்ள வேண்டும். மேலும் நல்ல நூல்கள், சஞ்சிகைகளை வாசித்தல், பயன்மிக்க பொழுதுபோக்குகளில் ஈடுபடல், ஆரோக்கியத்தை வளர்க்கும் உடற்பயிற்சிகளில் ஈடுபடல் போன்ற செயற்பாடுகளையும் தனக்கு நட்புக் குரியவையாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

## பயிற்சி

அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றைக் கொண்டு பின்வரும் வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.

1. நல்ல நண்பனுக்கு உதாரணம் ................................

2. அல்லாஹ்வுக்காக நேசம் கொண்டோர் ................................

3. அன்பளிப்புக்களைப் பரிமாறிக் கொள்ளல் .........................

4. தூய நட்பின் காரணமாக சாதாரண மனிதன் அல்லாஹ்விடம் அடையும் அந்தஸ்தைப் பார்த்து ............................

5. எமது நல்லமல்கள் எமக்கு மறுமையில் .............................

(நட்பை வளர்க்கும், சிபாரிசு செய்யும், கஸ்தூரி வியாபாரியாவார், நபிமார்களும் பொறாமைப் படுவார்கள், மறுமையில் நிழல் பெறுவார்)